

# தர்பியா

முதல் வகுப்பு

வெளியீடு:
தமுமுக
கிழக்கு மண்டலம்

இக்கால கட்டத்தில் மதீனாவிற்குள் பெரும் குழப்பங்களும் பிரச்சனைகளும் ஏற்பட்டன. மதீனாவிற்கு வெளியிலிருந்து முஸ்லிம்களை அழிப்பதற்காகவும் அழைப்புப்பணியை வேரறுப்பதற்காகவும் முயன்ற எதிரிகள் பத்ரு, உஹது, ஹந்தக் (அகழ்) போன்ற பெரும் போர்களை சந்தித்தனர். ஆனால் இக்காலகட்டம் ஹிஜ்ரி 6ஆம் ஆண்டு துல்கஅதாவில் நடந்த ஹு தைபிய்யா உடன்படிக்கையுடன் முடிவடைந்தது. அதற்குப் பிறகு அல்லாஹ் முஸ்லிம்களுக்கு வெற்றியையும், ஆதிக்கத்தையும் அருளினான்.

2. மிகப்பெரிய எதிரியுடன் சமாதான ஒப்பந்தம் செய்து கொள்ளுதல், அரசர்களை இஸ்லாத்தின் பக்கம் அழைத்தல், சதித்திட்டங்களை முறியடித்தல். இக்காலகட்டம் ஹிஜ்ரி 8 ஆம் ஆண்டு ரமழான் மாதம் புனித மக்கா வெற்றியுடன் முடிவுற்றது.

3. குழுக்களை வரவேற்றல், அல்லாஹ்வின் மார்க்கத்தில் மக்கள் கூட்டம் கூட்டமாக நுழைதல்.

இக்கால கட்டம் மக்கா வெற்றியிலிருந்து 11 ஆம் ஆண்டு ரபீவுல் அவ்வல் மாதத்தில் நபி (ஸல்) அவர்கள் மரணிக்கும் வரை தொடர்ந்தது.

(குறிப்பு: நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை பற்றிய கூடுதல் விபரங்களை 'ரஹீக்' எனும் நூலில் காணலாம்.)

---



## முன்னுரை

தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் அல்லாஹ்வின் மிகப்பெரும் உதவியால் சமுதாயப்பணிகளிலே முன்னணியில் செயல்பட்டு வருகிறது. தமுமுக வில் சேர்ந்து செயல்படக்கூடிய ஒவ்வொரு உறுப்பினரும் மறுமையின் வெற்றியையே நோக்கமாக கொண்டு சமுதாயப்பணிகளில் ஈடுபடுவதன் மூலம் அல்லாஹ்வின் அருளையும் மன்னிப்பையும் உரித்தாக்கிக் கொள்ள முடியும்.

இஃக்லாஸான முறையில் செயல்படுவதும் தனிமனித வாழ்கை பண்பட்டதாக இருப்பதும் இம்மை மறுமை வாழ்வின் வெற்றிக்கு மிகவும் பிரதானமாகும். ஆகவே தனிமனித வாழ்வு மற்றும் சமூக வாழ்வை நெறிப்படுத்திக் கொள்ள தர்பியா என்ற ஆன்மீக பயிற்சி அவசியமாகிறது.

இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் மத்தியில் தர்பியா பயிற்சி கொடுக்கப்பட வேண்டும் என்று கிழக்கு மண்டல தமுமுக நிர்வாகம் முடிவெடுத்தது.

தர்பியா பயிற்சியின் ஆரம்ப கட்டமாக முதல் வகுப்பு பாடத்திட்டத்தை வெளியிடுகிறோம். இந்த தொகுப்பில் அரபி உச்சரிப்புக்களை தமிழ் லிபியில் குறிப்பிட்டுள்ளோம். இது அரபி மொழி அறவே வாசிக்கத் தெரியாதவர்கள் ஆரம்பத்தில் உபயோகித்துக் கொள்வதற்காக உள்ளதாகும். அனைவரும் அரபி மொழியின் வாசகங்களை அரபி மொழியிலேயே கற்றுக் கொள்ள வேண்டும் என்பதும் தர்பியாவின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

இந்த பயிற்சியின் மூலமாக அல்லாஹ் நமது தனிப்பட்ட வாழ்க்கையையும், நமது சமுதாய வாழ்க்கையையும் நெறிப்படுத்தி, நமது செயல்பாடுகளை உளத்தூய்மை உள்ளதாக ஆக்கி இம்மை மறுமை வாழ்க்கையில் வெற்றியை தந்தருள்வானாக. ஆமீன்!

இவண்
தமுமுக கிழக்கு மண்டலம்.
10. 03. 2006

# தர்பியா

## தர்பியாவின் நோக்கம்:

அல்லாஹ் திருமறையில் சொல்கிறான்:

எந்த ஒரு சமுதாயத்தவரும், தம் நிலையைத் தாமே மாற்றிக் கொள்ளாத வரையில், அல்லாஹ் அவர்களை நிச்சயமாக மாற்றுவதில்லை.
(அல்குர்ஆன் 13:11)

நாம் நல்ல முஸ்லிமாக இருக்க வேண்டுமானால் நம்மிடம் அதற்குத் தகுதியான நல்ல பண்புகளும் நல்ல பழக்க வழக்கங்களும் இருக்க வேண்டும். நபி (ஸல்) அவர்களிடம் சஹாபாக்கள் எவ்வாறு பயிற்சி பெற்று சிறந்த சமுதாயமாக விளங்கினார்களோ அந்த அடிப்படையை பின்பற்றி சில பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலம் நாமும் சிறந்த முஸ்லிம்களாக ஆக முடியும்.
இன்ஷா அல்லாஹ்...

பரஸ்பரம் ஒருவருக்கொருவர் நல்ல விஷயங்களை கற்றுக் கொள்வதின் சிறப்பை கீழ்வரும் ஹதீஸ் விளக்குகிறது.

‘அல்லாஹ்வின் பள்ளிகளில் ஒரு பள்ளியில் அமர்ந்து இறைவேதத்தை ஓதி அதை தங்களுக்கு மத்தியிலே பரஸ்பரம் கற்றுக் கொள்ளும் கூட்டத்தின் மீது அல்லாஹ்வுடைய சகீனத் இறங்கியும் அவனுடைய ரஹ்மத் அவர்களை மூடியும், மலக்குகள் அவர்களை சூழ்ந்து கொண்டுமேயன்றி வேறில்லை. அவர்களை அல்லாஹ் தன்னிடம் உள்ளவர்களிடம் நினைவு கூறுவான்...” என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
(நூல்: முஸ்லிம்)



இந்த சந்தர்ப்பத்தில் முஸ்லிம்கள் சொல்லொனா துன்பங்களுக்கு ஆளாக்கப் பட்டார்கள், சமூக பகிஸ்காரம் செய்யப் பட்டார்கள். நபித்துவத்தின் 10 ஆம் ஆண்டில் தமக்கு உறுதுணையாக இருந்த அபூதாலிப் அவர்களையும் அருமை மனைவியார் கதீஜா (ரலி) அவர்களையும் இழந்தார்கள்.

(இ) மக்காவுக்கு வெளியே அழைப்புப் பணி:

இது பத்தாம் ஆண்டின் இறுதியிலிருந்து நபி (ஸல்) அவர்களின் இறுதிக்காலம் வரைத் தொடர்ந்தது. இந்த சந்தர்ப்பத்தில் தாயிப் போன்ற நகரங்களுக்குச் சென்று அழைப்புப் பணி செய்தார்கள். மேலும் இந்த காலகட்டத்தில் இஸ்லாமிய அடித்தளம் அமைக்கும் முகமாக அங்குள்ள மக்களுடன் ஒப்பந்தங்களும் செய்து கொண்டார்கள். ஹிஜ்ரிக்கு முன்னால் நபி (ஸல்) அவர்களை கொலை செய்ய தீவிரமான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அல்லாஹ்வின் அனுமதியின் பேரில் அருமைத் தோழர் அபூபக்கர் (ரலி) அவர்களுடன் ஹிஜ்ரத் செய்து மதீனா சென்றார்கள்.

# மதீனா வாழ்க்கை

மதீனா வாழ்க்கையை மூன்று கால கட்டங்களாக பிரிக்கலாம்.

1. இஸ்லாமிய சமூகத்திற்கு அடித்தளம் அமைத்தல், இஸ்லாமிய அழைப்புப் பணியை உறுதிப்படுத்துதல்.

ஊண்மையாளராக திகழ்ந்தார்கள். ஏந்த சந்தர்பத்திலும் பொய் பேசியதில்லை. மேலும் அந்த சமுதாயத்திலேயே மிகவும் நம்பிக்கைக்குரியவர்களாவும் திகழ்ந்தார்கள் ஆகவே, அஸ்ஸாதிக் (உண்மையாளர்), அல்அமீன் (நம்பிக்கைக்குரியவர்) என்ற பெயர்களால் அழைக்கப்பட்டார்கள்.

2. இறைத்தூதராகுதல் மற்றும் அழைப்புப் பணி:

நபி (ஸல்) அவர்கள் இறைத்தூதர் ஆன பிறகு உள்ள வாழ்க்கையை இரண்டு வகைப்படுத்தலாம். அவை ஒன்றுக் கொன்று தன்மையால் மாறுபடுகிறது.

மக்காவில் வாழ்ந்த காலம். இது 13 ஆண்டுகள்.

மதீனாவில் வாழ்ந்த காலம். இது 10 ஆண்டுகள்.

இவ்விரு வாழ்க்கையும் மாறுபட்ட பல நிலை-களைக் கொண்டிருக்கிறது. அவை ஒவ்வொன்றுக்கும் பல தனித்தன்மைகள் உண்டு. நபி (ஸல்) அழைப்புப் பணியில் கடந்து வந்த பாதைகளை ஆழ்ந்து கவனிக்கும் போது இதனை நாம் அறிகிறோம்.

மக்கா வாழ்க்கையை மூன்று கால கட்டங்களாக பிரிக்கலாம்.

(அ) மறைமுக அழைப்பு: இது மூன்று ஆண்டுகள் வரை நீடித்தது.

(ஆ) மக்காவாசிகளுக்கு பகிரங்க அழைப்பு: இது நான்காம் ஆண்டிலிருந்து ஹிஜ்ரத் வரை தொடர்ந்தது.



‘அல்லாஹ்வுடைய ரஹ்மத்தின் காரணமாகவே நீர் அவர்களிடம் மென்மையாக (கனிவாக) நடந்து கொள்கிறீர், (சொல்லில்) நீர் கடுகடுபானவராகவும், கடின சித்தம் உடையோ ராகவும் இருந்திருப்பீரானால், அவர்கள் உம்மை விட்டும் ஓடிப் போயிருப்பார்கள்’
(அல்குர்ஆன் 3:159)

# பாடம்-1 திருக்குர்ஆன் பயிற்சி

## திருக்குர்ஆன் ஓதுவதன் அவசியம்:

'(நபியே!) இவ்வேதத்திலிருந்து உமக்கு அறிவிக்கப்பட்டதை நீர் ஓதுவீராக!' (அல்குர்ஆன் 29:45)

'நிச்சயமாக எவர்கள் அல்லாஹ்வின் வேதத்தை ஓதுகிறார்களோ....அவர்கள் என்றும் அழியாத ஒரு வியாபாரத்தையே ஆதரவு வைக்கிறார்கள்'

'அவர்களுக்குரிய நற்கூலியை அவர்களுக்கு அவன் முழுமையாகக் கொடுப்பான், இன்னும் தன் அருளிலிருந்து அவர்களுக்கு அதிகப்படுத்துவான், நிச்சயமாக அவன் மிக மன்னிப்பவன் நன்றியை ஏற்றுக் கொள்பவன்' (அல்குர்ஆன் 35:29,30)

அபூஉமாமா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

நபி (ஸல்) அவர்கள் கூற நான் செவிமடுத்துள்ளேன். நீங்கள் குர்ஆனை ஓதுங்கள்! நிச்சயமாக குர்ஆன் கியாமத் நாளில் தன் தோழர்களுக்கு பரிந்துரை செய்யும். (நூல்: முஸ்லிம்)

'குர்ஆனைத் திறமையாக நல்ல முறையில் ஓதுபவர் நல்லோர்களான சங்கைமிகு மலக்குகளுடன் இருப்பார். குர்ஆனை (இயலாமையால்) கஷ்டப்பட்டவராகத் திக்கித் திக்கி ஓதுகிறவருக்கு இரண்டு நற்கூலிகள் உண்டு' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி), நூல்கள்: புகாரி, முஸ்லிம்)



# பாடம்-4 சீரா (நபி (ஸல்) அவர்களின் வரலாறு)

நபி (ஸல்) அவர்களை வழிகாட்டியாக ஏற்றுக் கொண்ட ஒவ்வொரு முஸ்லிமும் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை ஓரளவுக்காவது தெரிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்.

## சீராவின் பாடங்கள்:

## மக்கா வாழ்க்கை

1. இறைத்தூதராக ஆவதற்கு முன் உள்ள வாழ்க்கை:

பிறக்கும் பொழுது நபி (ஸல்) அவர்கள் தந்தையை இழந்த அனாதையாக பிறந்தார்கள். அவர்களின் தந்தையின் பெயர் அப்துல்லாஹ் பின் அப்துல் முத்தலிப், தாயாரின் பெயர் ஆமினா. தனது 6வது வயதில் தாயையும் இழந்தார்கள். 25 வயது வாலிபராக இருந்த போது தொழில் அதிபராக இருந்த கதீஜா அம்மையாரை மணமுடித்தார்கள். நபித்துவத்திற்கு சில ஆண்டுகளுக்கு முன்னால் அதிகமான நேரத்தை ஹிரா குகையில் இறைசிந்தனையில் கழித்தார்கள்.

இவர்களது வாழ்க்கையில் மனிதப் புனிதராக வாழ்ந்தார்கள். சமுதாயத்தில் அன்று புரையோடிப்போய் இருந்த மது, மாது, சூது, கொலை, கொள்ளை போன்ற எந்த கெட்ட பழக்கவழக்கங்களிலும் ஈடுபட்டதில்லை. ஆவர்கள்

முஹம்மது (ஸல்) உங்கள் ஆடவர்களில் எவருக்கும் தந்தையாக இருக்கவில்லை, ஆனால் அவரோ அல்லாஹ்வின் தூதராகவும், நபிமார்களுக்கெல்லாம் இறுதி (முத்திரை)யாகவும் இருக்கின்றார். மேலும் அல்லாஹ் எல்லாப் பொருட்களையும் நன்கு அறிந்தவன்’ (அல்குர்ஆன் 33:40)

கேள்வி 8
குப்ர் (நிராகரித்தல்) என்றால் என்ன?

பதில்:
குப்ர் (நிராகரித்தல்) என்றால் அல்லாஹ் ஏவிய ஏவல்களை மறுத்து அவன் தடுத்ததை செயல்படுத்துவது, அல்லாஹ் இல்லை என்று வாதாடுவது போன்றவைகளாகும்.

குப்ரின் சில வகைகள் கீழ்வருமாறு:

1. அல்லாஹ்வை நிராகரித்தல்
2. அல்லாஹ்வின் கட்டளைகளை அலட்சியப் படுத்துதல்
3. இறைவனை ஏற்று அவனது சட்ட திட்டத்தில் சந்தேகம் கொள்ளுதல்
4. ஈமான் கொண்ட பின் இறைவன் சட்ட திட்டத்தை மறுப்பது.
5. அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்தாமல் மாறு செய்வது.
6. அல்லாஹ்வின் சட்டதிட்டங்களை கேலி செய்வது.
7. இறை வேதத்தில் ஏதாவது சிலவற்றை மறுப்பது.

இவை போன்றவைகளாகும்.



‘அல்லாஹ்வின் அருள்மறையான திருக்குர்ஆனிலிருந்து ஓர் எழுத்தை ஒருவர் ஓதுவாரானால், அவருக்கு ஒரு நன்மை உண்டு. அந்த ஒரு நன்மை பத்து மடங்கு கொண்டதாகும். ‘அலிப், லாம், மீம் ஓர் எழுத்து என்று நான் கூறமாட்டேன். மாறாக ‘அலிப்’ ஒரு எழுத்தாகும், ‘லாம்’ ஒரு எழுத்தாகும், ‘மீம்’ ஓர் எழுத்தாகும். (மூன்றும் தனித்தனி எழுத்துக்களாகும். அம்மூன்றையும் ஒருவர் ஓதினால் ஒவ்வொன்றுக்கும் பத்து நன்மைகள் வீதம் முப்பது நன்மைகள் பெறுவார்.)’ என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி), நூல்: திர்மிதி)

‘குர்ஆனிலிருந்து சிறிதளவு கூட தம் உள்ளத்தில் மனனம் இல்லாதவர் பாழடைந்த வீடு போன்றவராவார்’ என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி), நூல்: திர்மிதி)

## திருக்குர்ஆன் பயிற்சிக்கான பாடங்கள்

1. தஜ்வீது: எழுத்துக்களை சரியாக உச்சரிக்க கற்றுக் கொள்ளுதல் (மஃக்ரஜ்)
2. மனனம்: கீழ்காணும் 11 ஸூராக்களையும் மனனம் செய்தல்.
3. பொருளாக்கம்: கீழ்காணும் 11 ஸூராக்களின் அர்த்தத்தை கற்றுக் கொள்ளுதல்.

## 1. அல்ஃபாத்திஹா (1)

بِسْمِ اللَّهِ الرَّحْمَنِ الرَّحِيمِ

الْحَمْدُ للَّهِ رَبِّ الْعَلَمِينَ ، الرَّحْمَنِ الرَّحِيمِ ، مَلكِ يَوْمِ الدِّينِ ، إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ ، اهْدِنَا الصِّرَطَ الْمُسْتَقِيمَ ، صِرَطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ

1. அனைத்துப்புகழும், அகிலங்கள் எல்லாவற்றையும் படைத்து வளர்த்துப் பரிபக்குவப்படுத்தும் (நாயனான) அல்லாஹ்வுக்கே ஆகும்.
2. (அவன்) அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்.
3. (அவனே நியாயத்) தீர்ப்பு நாளின் அதிபதி(யும் ஆவான்).
4. (இறைவா!) உன்னையே நாங்கள் வணங்குகிறோம், உன்னிடமே நாங்கள் உதவியும் தேடுகிறோம்.
5. நீ எங்களை நேர் வழியில் நடத்துவாயாக!
6. (அது) நீ எவர்களுக்கு அருள் புரிந்தாயோ அவ்வழி.
7. (அது) உன் கோபத்துக்கு ஆளானோர் வழியுமல்ல, நெறி தவறியோர் வழியுமல்ல.



‘நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைப்பதை மன்னிக்க மாட்டான், இதைத் தவிர (மற்ற) எதையும் தான் நாடியவர்களுக்கு மன்னிப்பான், யார் அல்லாஹ்வுக்கு இணை வைக்கிறார்களோ அவர்கள் நிச்சயமாக மிகவும் பெரிய பாவத்தையே கற்பனை செய்கிறார்கள்’ (அல்குர்ஆன் 4:48)

கேள்வி 7
இறைத்தூதர்கள் என்றால் யார்?

பதில்:
மனிதனைப் படைத்து அவனுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தித் தந்த அல்லாஹ் அம்மனிதர்கள் நேரான வழியில் நடக்க வேண்டும் என்பதற்காகவும் அவர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காகவும் நன்மாராயம் கூறுவதற்காக அனுப்பப்பட்டவர்களே இறைத்தூதர்கள் ஆவார்கள். இறைத்தூதர்கள் எல்லா சமுதாயத்தினருக்கும் அனுப்பப் பட்டிருக்கிறார்கள்.

‘...ஒவ்வொரு சமூகத்தவருக்கும் ஒரு நேர்வழிகாட்டி உண்டு’ (அல்குர்ஆன் 13:7)

இப்படிப்பட்ட இறைத்தூதர்கள் வரிசையிலே இறுதியாக அனுப்பப்பட்ட அகில உலக பொதுத்தூதர் முஹம்மது (ஸல்) ஆவார்கள்.

‘இன்னும், (நபியே!) நாம் உம்மை மனித குலம் முழுமைக்கும் நன்மாராயம் கூறுபவராகவும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவும் அன்றி அனுப்பவில்லை, ஆனால் மனிதர்களில் பெரும்பாலோர் (இதை) அறிய மாட்டார்கள். (அல்குர்ஆன் 34:28)

இறுதி இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் மீது தெளிவான அரபி மொழியில் இறக்கப்பட்ட இறை வேதம் என்றும் இதில் தெளிவான அத்தியாயங்களும் வசனங்களும் உண்டு என்றும் இறைவனால் பாதுகாக்கப்படுகிறது என்றும் மக்களுக்கு நேர்வழி காட்டியாகவும் நல்லுபதேசமாகவும் இறக்கப்பட்டது என்றும் இது போன்ற அற்புதம் வாய்ந்த ஒன்றை யாராலும் கொண்டு வர முடியாது என்றும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதாக இருக்கிறது என்றும் உறுதி பட நம்ப வேண்டும்.

‘இந்தக் குர்ஆனைப் போன்ற ஒன்றை கொண்டு வருவதற்காக மனிதர்களும் ஜின்களும் ஒன்று சேர்ந்தாலும் இது போன்ற ஒன்றை கொண்டு வர முடியாது என்று (நபியே!) நீர் கூறும்’ (அல்குர்ஆன் 17:88)

கேள்வி 6

ஷிர்க் (இணைவைத்தல்) என்றால் என்ன?

பதில்:

ஷிர்க் (இணைவைத்தல்) என்பது தவ்ஹீதுக்கு (ஏகத்துவத்திற்கு) எதிர்ப்பதமாகும். அதாவது அல்லாஹ்வுக்கு இணையாக மற்றவர்கள் உண்டு என்றோ, அல்லாஹ்வின் பண்புகள் மற்றவர்களுக்கு இருக்கிறது என்பன போன்றோ நம்புவதற்கு பெயர்தான் ஷிர்க் ஆகும்.

‘...அவர்கள் இணை வைப்பார்களானால் அவர்கள் செய்து வந்த நல்லறங்கள் எல்லாம் அவர்களை விட்டும் அழிந்து விடும்’ (அல்குர்ஆன் 6:88)



## 2. ஸூரத்துந் நாஸ் (114)

بِسْمِ اللَّهِ الرَّحْمَنِ الرَّحِيمِ

قُلْ أَعُوذُ بِرَبِّ النَّاسِ ، مَلِكِ النَّاسِ، إِلَهِ
النَّاسِ،مِنْ شَرِّ الْوَسْوَاسِ الْخَنَّاسِ،الَّذِي
يُوَسْوِسُ فِي صُدُورِ النَّاسِ ، مِنْ الْجِنَّةِ وَالنَّاسِ

1. (நபியே!) நீர் கூறுவீராக: மனிதர்களின் இறைவனிடத்தில் காவல் தேடுகிறேன்.

2. (அவனே) மனிதர்களின் அரசன்.

3. (அவனே) மனிதர்களின் நாயன்.

4. பதுங்கியிருந்து வீண் சந்தேகங்களை உண்டாக்குபவனின் தீங்கை விட்டும் (இறைவனிடத்தில் நான் காவல் தேடுகிறேன்).

5. அவன் மனிதர்களின் இதயங்களில் வீண் சந்தேகங்களை உண்டாக்குகிறான்.

6. (இத்தகையோர்) ஜின்களிலும், மனிதர்களிலும் இருக்கின்றனர்.

### 3. ஸூ ரத்துல் ஃபலக் (113)

بِسْمِ اللَّهِ الرَّحْمَنِ الرَّحِيمِ

قُلْ أَعُوذُ بِرَبِّ الْفَلَقِ ، مِنْ شَرِّ مَا خَلَقَ ،
وَمِنْ شَرِّ غَاسِقٍ إِذَا وَقَبَ ، وَمِنْ شَرِّ النَّفَّٰثَٰتِ
فِي الْعُقَدِ ، وَمِنْ شَرِّ حَاسِدٍ إِذَا حَسَدَ

1. நபியே!) நீர் சொல்வீராக: அதிகாலையின் இறைவனிடத்தில் நான் காவல் தேடுகிறேன்.

2. அவன் படைத்தவற்றின் தீங்கை விட்டும்-

3. இருள் பரவும் போது ஏற்படும் இரவின் தீங்கை விட்டும்-

4. இன்னும், முடிச்சுகளில் (மந்திரித்து) ஊதும் பெண்களின் தீங்கை விட்டும்

5. பொறாமைக்காரன் பொறாமை கொள்ளும் போதுண்டாகும் தீங்கை விட்டும் (காவல் தேடுகிறேன்).



பிறகு அவனே உங்களை உயிர்ப்பிப்பான், - இவற்றில் ஏதேனும் ஒன்றைச் செய்யக்கூடியதாக உங்கள் இணை தெய்வங்கள் இருக்கிறதா? அல்லாஹ் மிகவும் தூயவன், அவர்கள் இணை வைப்பதை விட்டும் மிகவும் உயர்ந்தவன். (அல்குர்ஆன் 30:40)

தவ்ஹீதுல் அஸ்மாவஸ்ஸிஃபாத்:

அல்லாஹ் தன்னைப் பற்றி எந்தெந்த நற்பெயர்கள் உயர் பண்புகள் ஆகியவற்றின் மூலம் வர்ணித்து உள்ளானோ மேலும் அவனுடைய தூதர் எந்தெந்த நற்பெயர்கள் உயர் பண்புகள் ஆகியவற்றின் மூலம் அவனை வர்ணித்து உள்ளார்களோ அவை அனைத்தும் அல்லாஹ்வுக்கு மாத்திரமே இருப்பதாக நம்புவதற்கு தவ்ஹீதுல் அஸ்மாவஸ்ஸிஃபாத் என்று சொல்லப்படும்.

அல்லாஹ்வின் பெயர்களையும் பண்புகளையும் மறுக்காமல் விளக்கங்கள் சொல்லாமல் உதாரணங்கள் சொல்லாமல் அல்லாஹ் ரசூல் கற்றுத் தந்த படி அப்படியே நம்ப வேண்டும்.

‘...அவனைப் போன்று எப்பொருளும் இல்லை, அவன் தான் (யாவற்றையும்) செவியேற்பவன் பார்க்கக்கூடியன்’ (அல்குர்ஆன் 42:11)

கேள்வி 5

குர்ஆனை எவ்வாறு நம்ப வேண்டும்?

பதில்:

திருமறைக் குர்ஆன் அகிலங்களைப் படைத்து பரிபாலிக்கக் கூடிய இறைவனால் ஜிப்ராஈல் (அலை) மூலம்

தவ்ஹீதுல் உலூஹிய்யா:

அல்லாஹ் ஒருவன் மட்டும் தான் வணங்கப்படுவதற்கு தகுதியானவன் என்று உறுதிபட நம்பி, வணக்கங்கள் அனைத்தையும் அல்லாஹ் ஒருவனுக்கே செலுத்தி, அவன் அல்லாத எவரையும் வணங்க மறுப்பதற்கு பெயர் தான் தவ்ஹீதுல் உலூஹிய்யா ஆகும். இதற்கு தவ்ஹீதுல் இபாதா (வணக்கம்) என்று மற்றொரு பெயரும் உண்டு.

இறைவனுக்கு செய்யப்படும் வணக்கங்களுக்கு உதாரணம்: தொழுதல், நோன்பு வைத்தல், சிரவணக்கம் செய்தல், பிரார்த்தனை, பேரச்சம், பாவமன்னிப்பு, உதவி தேடுதல், பாதுகாப்பு தேடுதல், இரட்சிப்பு தேடுதல், அறுத்துப் பலியிடுதல், நேர்ச்சை செய்தல் போன்றவைகளாகும்.

தவ்ஹீதுர் ருபூபிய்யா:

படைத்தல், உணவளித்தல், உயிர்ப்பித்தல், மரணிக்கச் செய்தல், அனைத்துக் காரியங்களையும் திட்டமிட்டு செயல்படுத்துதல் போன்ற காரியங்களை அல்லாஹ் மட்டுமே செய்யக்கூடியவன் என்று நம்புவது தவ்ஹீது ருபூபிய்யாவாகும்.

‘அல்லாஹ் தான் உங்களை படைத்தான், பின் உங்களுக்கு உணவு வசதிகளை அளித்தான், அவனே பின்னர் உங்களை மரிக்கச் செய்கிறான்,



## 4. ஸூரத்துல் இஃக்லாஸ் (112)

بِسْمِ اللَّهِ الرَّحْمَنِ الرَّحِيمِ

قُلْ هُوَ اللَّهُ أَحَدٌ ، اللَّهُ الصَّمَدُ ،
لَمْ يَلِدْ وَلَمْ يُولَدْ ، وَلَمْ يَكُنْ لَهُ كُفُوًا أَحَدٌ

1. (நபியே!) நீர் கூறுவீராக: அல்லாஹ் அவன் ஒருவனே.

2. அல்லாஹ் (எவரிடத்தும்) தேவையற்றவன்.

3. அவன் (எவரையும்) பெறவுமில்லை (எவராலும்) பெறப்படவுமில்லை.

4. அன்றியும், அவனுக்கு நிகராக எவரும் இல்லை.

### 5. ஸூ ரத்துல் லஹப் (111)

بِسْمِ اللَّهِ الرَّحْمَنِ الرَّحِيمِ

تَبَّتْ يَدَا أَبِي لَهَبٍ وَتَبَّ ، مآ أَغْنٰى عَنْهُ مَالُهُ
وَمَا كَسَبَ ، سَيَصْلٰى نَارًا ذَاتَ لَهَبٍ ،
وَامْرَأَتُهُ حَمَّالَةَ الْحَطَبِ ، فِي جِيدِهَا حَبْلٌ
مِّنْ مَّسَدٍ

1. அபூலஹபின் இரண்டு கைகளும் நாசமடைக, அவனும் நாசமாகட்டும்.
2. அவனுடைய பொருளும், அவன் சம்பாதித்தவையும் அவனுக்குப் பயன்படவில்லை.
3. விரைவில் அவன் கொழுந்து விட்டெரியும் நெருப்பில் புகுவான்.
4. விறகு சுமப்பவளான அவனுடைய மனைவியோ,
5. அவளுடைய கழுத்தில் முறுக்கேறிய ஈச்சங் கயிறுதான் (அதனால் அவளும் அழிவாள்).



கேள்வி 3

தவ்ஹீது (ஏகத்துவம்) என்றால் என்ன?

பதில்:

அல்லாஹ் தனித்தவன். அவன் ஒருவன் தான் இறைவன். அவன் அல்லாமல் வேறு யாரும் இறைவன் இல்லை. அவனுக்கு நிகர் வேறு எவரும் இல்லை. அவன் அனைத்தின் மீதும் ஆற்றல் உள்ளவன். அவனுக்கு மட்டுமே வணக்கத்தை செலுத்த வேண்டும் என்று அவனை ஒருமைப் படுத்துவதற்குப் பெயர் தான் தவ்ஹீது ஆகும்.

கேள்வி 4

தவ்ஹீதின் வகைகள் யாவை? அவை-களை விளக்குக.

பதில்:

தவ்ஹீது 3 வகைப்படும்.

1. தவ்ஹீதுல் உலூஹிய்யா
2. தவ்ஹீதுர் ருபூபிய்யா
3. தவ்ஹீதுல் அஸ்மாவஸ்ஸி∴பாத்

# அகீதாவின் பாடங்கள்

பேராசிரியை செய்யது ராபியா ரோசன் அவர்கள் ஏழுதிய **'தவ்ஹீது என்றால் என்ன?'** என்ற புத்தகத்தில் இருந்து கீழ்வரும் பாடங்கள் கேள்வி பதில் பாணியில் தொகுக்கப்பட்டுள்ளன.

கேள்வி 1
லாயிலாஹ இல்லல்லாஹ் என்பதன் பொருள் என்ன?

புதில்:
'அல்லாஹுவைத் தவிர வணக்கத்துக்கு உரியவன் வேறு யாருமில்லை' என்பது தான் இதன் பொருளாகும். இது கலிமத்துத் தவ்ஹீது என்று சொல்லப்படுகிறது.

கேள்வி 2
நபிமார்கள் மக்களுக்கு முதன் முதலில் எதைப் போதித்தார்கள்?

பதில்:
நபிமார்கள் மக்களுக்கு முதன் முதலில் தவ்ஹீதைப் போதித்தார்கள்.

'மெய்யாகவே நாம் ஒவ்வொரு சமூ கத்தாரிடத்திலும் 'அல்லாஹ்வையே நீங்கள் வணங்குங்கள் ஷைத்தான்களை விட்டும் நீங்கள் விலகிச் செல்லுங்கள்' என்று (போதிக்குமாறு) நம் தூதர்களை அனுப்பி வைத்தோம்.
(அல்குர்ஆன் 16:36)



## 6. ஸூரத்துந் நஸ்ர் (110)

بِسْمِ اللَّهِ الرَّحْمَنِ الرَّحِيمِ

إِذَا جَآءَ نَصْرُ اللَّهِ وَالْفَتْحُ ، وَرَأَيْتَ النَّاسَ
يَدْخُلُونَ فِي دِينِ اللَّهِ أَفْوَاجًا ، فَسَبِّحْ بِحَمْدِ
رَبِّكَ وَاسْتَغْفِرْهُ إِنَّهُ كَانَ تَوَّابًا

1. அல்லாஹ்வுடைய உதவியும், வெற்றியும் வரும்போதும்,

2. மேலும், அல்லாஹ்வின் மார்க்கத்தில் மக்கள் அணியணியாகப் பிரவேசிப்பதை நீங்கள் காணும் போதும்.

3. உம்முடைய இறைவனின் புகழைக் கொண்டு (துதித்து) தஸ்பீஹு செய்வீராக, மேலும் அவனிடம் பிழை பொறுக்கத் தேடுவீராக - நிச்சயமாக அவன் **"தவ்பாவை"** (பாவமன்னிப்புக் கோருதலை) ஏற்றுக் கொள்பவனாக இருக்கின்றான்.

### 7. ஸூ ரத்துல் கா:.பிரூன் (109)

بِسْمِ اللَّهِ الرَّحْمَنِ الرَّحِيمِ

قُلْ يَأَيُّهَا الْكَفِرُونَ ، لآ أَعْبُدُ مَا تَعْبُدُونَ ،
وَلاَ أَنْتُمْ عَبِدُونَ مَا أَعْبُدُ ، وَلآ أَنَا عَابِدٌ مَا
عَبَدتُّمْ ، وَلآ أَنْتُمْ عَبِدُونَ مَا أَعْبُدُ ،
لَكُمْ دِينُكُمْ وَلِيَ دِينِ

1. (நபியே!) நீர் சொல்வீராக: "கா:.பிர்களே!

2. நீங்கள் வணங்குபவற்றை நான் வணங்கமாட்டேன்.

3. இன்னும், நான் வணங்குகிறவனை நீங்கள் வணங்குகிறவர்களல்லர்.

4. அன்றியும், நீங்கள் வணங்குபவற்றை நான் வணங்குபவனல்லன்.

5. மேலும், நான் வணங்குபவனை நீங்கள் வணங்குபவர்கள் அல்லர்.

6. உங்களுக்கு உங்களுடைய மார்க்கம் எனக்கு என்னுடைய மார்க்கம்."



# பாடம்-3 அகீதா

## அகீதாவின் அவசியம்:

சரியான முறையில் இஸ்லாமிய அகீதாவை (அடிப்படைக் கொள்கையை) விளங்கிக் கொள்வதன் மூலம் நரக நெருப்பிலிருந்து பாதுகாப்பு பெறலாம் என்பதை கீழ் வரும் ஹதீஸ் விளக்குகிறது.

'...நிச்சயமாக இஸ்ராயீலின் சந்ததியினர் 72 பிரிவுகளாக பிரிந்து விட்டனர், என் சமூகத்தினர் 73 பிரிவுகளாக பிரிந்து விடுவர். இவர்கள் அனைவரும் நரகத்திற்குச் செல்வர். ஒரு பிரிவினர் தவிர' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். 'அவர்கள் யார்?' என்று நபித்தோழர்கள் வினவினர்.

'நானும், என் தோழர்களும் எவ்வழியில் இருக்கிறோமோ அவ்வழியில் இருப்பவர்கள்' என நபி (ஸல்) பதிலளித்தார்கள்.
(அறிவிப்பவர்: இப்னு அம்ருப்னுல் ஆஸ் (ரலி), நூல்: திர்மிதி)

ஆகவே நபி (ஸல்) அவர்களும் சஹாபாக்களும் எந்த அடிப்படைக் கொள்கையில் இருந்தார்களோ அந்த அகீதாவை முழுக்க விளங்கி ஏற்றுக் கொள்வதன் மூலம் சொர்க்கத்திற்குச் செல்லக் கூடிய பிரிவினராக நாம் ஆகலாம்.

4.

اللَّهُمَّ بِاسْمِكَ أَمُوْتُ وَأَحْيَا

(அல்லாஹும்ம பிஸ்மிக்க அமூத்து வஅஹ்யா)

பொருள்:

இறைவா! உன் பெயர் கூறியே இறக்கிறேன், உயிர் வாழவும் செய்கிறேன். (புகாரி)



8. ஸூரத்துல் கவ்ஸர் (108)

بِسْمِ اللَّهِ الرَّحْمَنِ الرَّحِيمِ

إِنَّا أَعْطَيْنٰكَ الْكَوْثَرَ ، فَصَلِّ لِرَبِّكَ وَانْحَرْ ، إِنَّ شَانِئَكَ هُوَ الْأَبْتَرُ

1. (நபியே!) நிச்சயமாக நாம் உமக்கு கவ்ஸர் (என்ற தடாகத்தை) கொடுத்திருக்கின்றோம்.
2. எனவே, உம் இறைவனுக்கு நீர் தொழுது, குர்பானியும் கொடுப்பீராக.
3. நிச்சயமாக உம்முடைய பகைவன் (எவனோ) அவன்தான் சந்ததியற்றவன்.

## 9. ஸூ ரத்துல் மாஊன் (107)

بِسْمِ اللَّهِ الرَّحْمَنِ الرَّحِيمِ
اَرَءَيْتَ الَّذِيْ يُكَذِّبُ بِالدِّينِ ، فَذٰلِكَ الَّذِي
يَدُعُّ الْيَتِيمَ ،وَلاَ يَحُضُّ عَلٰى طَعَامِ الْمِسْكِينِ ،
فَوَيْلٌ لِلْمُصَلِّينَ ، الَّذِينَ هُمْ عَنْ صَلَاتِهِمْ
سَاهُونَ ، الَّذِينَ هُمْ يُرَآءُونَ ، وَيَمْنَعُونَ
الْمَاعُونَ

1. (நபியே!) நியாயத்தீர்ப்பைப் பொய்ப்பிக்கின்றானே அவனை நீர் பார்த்தீரா?
2. பின்னர் அவன்தான் அநாதைகளை விரட்டுகிறான்.
3. மேலும், ஏழைக்கு உணவளிப்பதின் பேரிலும் அவன் தூண்டுவதில்லை.
4. இன்னும், (கவனமற்ற) தொழுகையாளிகளுக்குக் கேடுதான்.
5. அவர்கள் எத்தகையோர் என்றால் தம் தொழுகையில் பராமுகமாக(வும், அசிரத்தையாக)வும் இருப்போர்.
6. அவர்கள் பிறருக்குக் காண்பிக்(கவே தான் தொழு)கிறார்கள்.
7. மேலும், அற்பமான (புழங்கும்) பொருள்களைக் (கொடுப்பதை விட்டும்) தடுக்கிறார்கள்.



பொருள்:

அல்லாஹ்-அவனைத்தவிர (வணக்கத்திற்குரிய) நாயன் வேறு இல்லை. அவன் என்றென்றும் ஜீவித்திருப்பவன், என்றென்றும் நிலைத்திருப்பவன், அவனை அரி துயிலோ, உறக்கமோ பீடிக்கா, வானங்களிலுள்ளவையும், பூமியிலுள்ளவையும் அவனுக்கே உரியன, அவன் அனுமதியின்றி அவனிடம் யார் பரிந்துரை செய்ய முடியும்? (படைப்பினங்களுக்கு) முன்னருள்ளவற்றையும், அவற்றுக்குப் பின்னருள்ளவற்றையும் அவன் நன்கறிவான். அவன் ஞானத்திலிருந்து எதனையும், அவன் நாட்டமின்றி, எவரும் அறிந்துகொள்ள முடியாது. அவனுடைய அரியாசனம் (குர்ஸிய்யு) வானங்களிலும், பூமியிலும் பரந்து நிற்கின்றது. அவ்விரண்டையும் காப்பது அவனுக்குச் சிரமத்தை உண்டாக்குவதில்லை - அவன் மிக உயர்ந்தவன் மகிமை மிக்கவன். (அல்குர்ஆன் 2:255)

## 10. தூங்குவதற்கு முன்

1. குல்ஹுவல்லாஹு அஹது, குல் அவூது பிரப்பல் ஃபலக், குல் அவூது பிரப்பின்னாஸ் ஆகிய மூன்று சூராக்களையும் ஓதி கைகளில் ஊதி உடல் முழவதும் தடவுதல். (மூன்று முறை செய்ய வேண்டும்) (புகாரி 5017, முஸ்லிம் 2192)
2. ஆயத்துல் குர்ஸியை ஓதுதல் (புகாரி 2311)
3. சுப்ஹானல்லாஹ் - 33, அல்ஹம்துலில்லாஹ் - 33, அல்லாஹு அக்பர் - 34 (புகாரி 5362, முஸ்லிம் 2727)

(லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக லஹு லஹு ல் முல்கு வலஹு ல் ஹம்து வஹ ு வ அலா குல்லி ஷையின் கதீர். ஆல்லாஹு ம்ம லா மானிஅ லிமா அ∴தைத்த வலா மு∴திய லிமா மன∴த்த வலா யன்∴பஉ தல்ஜத்தி மின்கல் ஜத்து.)

பொருள்:

வணங்கப்படுவதற்கு உரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை. அவன் தனித்தவன். இணை இல்லாதவன். அவனுக்கே ஆட்சி அதிகாரம் உரியதாகும். அவனுக்கே புகழ் அனைத்தும். அவன் எல்லாவற்றின் மீதும் பேராற்றல் உள்ளவன். அல்லாஹ்வே! நீ கொடுத்ததை யாராலும் தடுக்க முடியாது. நீ தடுத்ததை யாராலும் கொடுக்கவும் முடியாது. மதிப்புடைய எவரும் எந்தப் பயனும் அளிக்க முடியாது. மதிப்பு உன்னிடமே உள்ளது. (நூல்கள்: புகாரி 844, முஸ்லிம் 933.)

ஆயத்துல் குர்ஸீ

ٱللَّهُ لَآ إِلَٰهَ إِلَّا هُوَ ٱلْحَىُّ ٱلْقَيُّومُ ۚ لَا تَأْخُذُهُۥ سِنَةٌ وَلَا نَوْمٌ ۚ لَّهُۥ مَا فِى
ٱلسَّمَٰوَٰتِ وَمَا فِى ٱلْأَرْضِ ۗ مَن ذَا ٱلَّذِى يَشْفَعُ عِندَهُۥٓ إِلَّا بِإِذْنِهِۦ ۚ يَعْلَمُ
مَا بَيْنَ أَيْدِيهِمْ وَمَا خَلْفَهُمْ ۖ وَلَا يُحِيطُونَ بِشَىْءٍ مِّنْ عِلْمِهِۦٓ إِلَّا بِمَا شَآءَ ۚ
وَسِعَ كُرْسِيُّهُ ٱلسَّمَٰوَٰتِ وَٱلْأَرْضَ ۖ وَلَا يَـُٔودُهُۥ حِفْظُهُمَا ۚ وَهُوَ ٱلْعَلِىُّ
ٱلْعَظِيمُ ﴿٢٥٥﴾



## 10. ஸூ ரத்து குறைஷின் (106)

بِسْمِ اللَّهِ الرَّحْمَنِ الرَّحِيمِ

لإِ يْلَفِ قُرَيْشٍ ،إِلَفِهِمْ رِحْلَةَ الشِّتَآءِ وَالصَّيْفِ
، فَلْيَعْبُدُوا رَبَّ هَذَا الْبَيْتِ ، الَّذِي أَطْعَمَهُـــمْ
مِنْ جُوعٍ وَءَامَنَهُمْ مِنْ خَوْفٍ

1. குறைஷிகளுக்கு விருப்பம் உண்டாக்கி,

2. மாரி காலத்துடையவும் கோடைக்காலத்துடையவும் பிரயாணத்தில் அவர்களுக்கு மன விருப்பத்தை உண்டாக்கியமைக்காக-

3. இவ்வீட்டின் (கஅபாவின்) இறைவனை அவர்கள் வணங்குவார்களாக.

4. அவனே, அவர்களுக்கு பசிக்கு உணவளித்தான் மேலும் அவர்களுக்கு அச்சத்திலிருந்தும் அபயமளித்தான்.

## 11. ஸூ ரத்துல் ஃபீல் (105)

بِسْمِ اللَّهِ الرَّحْمَنِ الرَّحِيمِ

أَلَمْ تَرَ كَيْفَ فَعَلَ رَبُّكَ بِأَصْحَابِ الْفِيلِ ،
أَلَمْ يَجْعَلْ كَيْدَهُمْ فِي تَضْلِيلٍ ، وَأَرْسَلَ عَلَيْهِمْ
طَيْرًا أَبَابِيلَ ، تَرْمِيهِمْ بِحِجَارَةٍ مِّنْ سِجِّيلٍ ،
فَجَعَلَهُمْ كَعَصْفٍ مَّأْكُولٍ

1. (நபியே!) யானை(ப் படை)க் காரர்களை உம் இறைவன் என்ன செய்தான் என்பதை நீர் பார்க்கவில்லையா?

2. அவர்களுடைய சூழ்ச்சியை அவன் பாழாக்கி விடவில்லையா?

3. மேலும், அவர்கள் மீது பறவைகளைக் கூட்டங் கூட்டமாக அவன் அனுப்பினான்.

4. சுடப்பட்ட சிறு கற்களை அவர்கள் மீது அவை எறிந்தன.

5. அதனால், அவர்களை மென்று தின்னப்பட்ட வைக்கோலைப் போல் அவன் ஆக்கி விட்டான்.



## 9. தொழுகையை முடித்ததும்

أَسْتَغْفِرُ اللهَ

(அஸ்தஃக்ஃபிருல்லாஹ்)

பொருள்:
அல்லாஹ்விடம் பாவ மன்னிப்பு தேடுகிறேன் - என்று மூன்று முறை கூற வேண்டும்.

اللهم أَنْتَ السَّلاَمُ وَمِنْكَ السَّلاَمُ
تَبَارَكْتَ يَاذَا الْجَلاَلِ وَالإِكْرَامِ

(அல்லாஹு ம்ம அன்தஸ்ஸலாம் வமின்கஸ் ஸ லாம், தபாரக்த யாதல் ஜலாலி வல் இக்ராம்)

பொருள்:
அல்லாஹ்வே! நீயே சாந்தியானவன். உன்னிடமிருந்து தான் சாந்தி உண்டாகின்றது. கவுரவத்திற்கும், கண்ணியத்திற்கும் உரியவனே! நீயே பாக்கிய மிக்கவனாவாய்!

لاَإِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ
الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيْرُ اللَّهُمَّ لاَ
مَانِعَ لِمَا أَعْطَيْتَ وَلاَ مُعْطِيَ لِمَا مَنَعْتَ وَلاَ
يَنْفَعُ ذَا الْجَدِّ مِنْكَ الْجَدُّ

பொருள்:
வுணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை, அவன் ஏகன், அவனுக்கு இணை எவனுமில்லை என்று நான் உறுதியாக நம்புகிறேன். நிச்சயமாக முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடிமையும், தூதருமாவார்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.
(நூல்கள்: முஸ்லிம் அபூதாவூது, இப்னுமாஜா)

7. பள்ளியின் உள்ளே நுழையும் போது

اللَّهُمَّ افْتَحْ لِي أَبْوَابَ رَحْمَتِكَ

(அல்லாஹு ம்ம:ப்தஹ்லீ அப்வாப ரஹ்மதிக)
பொருள்:
அல்லாஹ்வே! உன் கருணையின் வாசல்களை எனக்குத் திறந்திடுவாயாக!

8. பள்ளியிலிருந்து வெளியேறும் போது

اللَّهُمَ إِنِّي أَسْأَلَكَ مِنْ فَضْلِكَ

(ஆல்லாஹு ம்ம இன்னீ அஸ்அலுக மின் ஃ பழ்லிக. )

பொருள்:

அல்லாஹ்வே! நான் உன்னிடம் உன் பேரருளைக் கேட்கிறேன். (நூல்: முஸ்லிம் 1165)



## பாடம்-2 திக்ரு பயிற்சி

## திக்ருகளின் சிறப்புகள்:

'என்னை நீங்கள் நினைவு கூறுங்கள், நானும் உங்களை நினைவு கூறுவேன்' (அல்குர்ஆன் 2:152)

'(நபியே!) நீர் உம் மனதிற்குள் மிக்க பணிவோடும், அச்சத்தோடும் (மெதுவாக) உரத்த சப்தமின்றி காலையிலும் மாலையிலும் உம் இறைவனின் (திருநாமத்தை) திக்ரு செய்து கொண்டு இருப்பீராக! (அவனை) மறந்து விட்டிருப்போரில் ஒருவராக நீர் இருக்க வேண்டாம்' (அல்குர்ஆன் 7:205)

'ஈமான் கொண்டவர்களே! அல்லாஹ்வை அதிகமதிகமாக திக்ரு செய்யுங்கள். இன்னும் காலையிலும் மாலையிலும் அவனைத் துதி செய்யுங்கள்' (அல்குர்ஆன் 33:41,42)

'அல்லாஹ்வை திக்ரு செய்தவர்களாக அமரும் கூட்டத்தினரை மலக்குகள் சூழ்ந்தும், ரஹ்மத் (இறையருள்) அவர்களை மூடியும் 'ஸகீனா' என்னும் நிம்மதி அவர்கள் மீது இறங்கியுமே தவிர வேறில்லை. அல்லாஹ் தன்னிடமுள்ளவர்களிடம் (மலக்குகளிடம்) அவர்களைப் பற்றி (புகழ்ந்து) கூறுகிறான்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பாளர்கள்: அபூஹு ரைரா (ரலி), அபூ ஸயீது (ரலி) நூல்: முஸ்லிம்)

அல்லாஹு த்தஆலாவின் சில மலக்குகள், திக்ரு செய்பவர்களைத் தேடியவர்களாக பாை-தயில் சுற்றுவார்கள். அல்லாஹு த்தஆலாவை திக்ரு செய்யும் கூட்டத்தாரை அவர்கள் கண்டால் உடனே, 'இதோ இங்கு உங்கள் குறிக்கோளின்

பக்கம் வாருங்கள்' என அவர்கள் ஒருவருக்கொருவர் அழைப்பு விடுப்பார்கள். உடனே அனைத்து மலக்குகளும் அங்கு வந்து, திக்ரு செய்யும் கூட்டத்தாரை முதல் வானம் வரை சூழ்ந்து கொள்வார்கள்.

பிறகு அவர்களின் இரட்சகனான அல்லாஹ் - அவன் மிக அறிந்தவன் - என் அடியார்கள் என்ன கூறினார்கள்? என்று கேட்பான். அதற்கவர்கள், உன்னை தஸ்பீஹ் செய்கிறார்கள், உன்னை தக்பீர் கூறுகிறார்கள், உன்னை புகழ்கிறார்கள், உன்னை கண்ணியப்படுத்துகிறார்கள் எனக் கூறுவார்கள்.

அதற்கவன், என்னை அவர்கள் பார்த்துள்ளார்களா? என்று கேட்பான். அதற்கவர்கள் இல்லை, அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவர்கள் உன்னைப் பார்க்கவில்லை என்பார்கள். அதற்கு அல்லாஹ், அவர்கள் என்னைப் பார்த்திருந்தால் எவ்வாறு இருப்பார்கள்? எனக் கேட்பான். அதற்கு மலக்குகள், அவர்கள் உன்னைப் பார்த்திருந்தால், இன்னும் மிக அதிகமாக உன்னை வணங்குபவர்களாகவும், மிக அதிகமாக உன்னைக் கண்ணியப்படுத்துபவர்களாகவும், மிக அதிகமாக உன்னை தஸ்பீஹ் செய்பவர்களாகவும் இருப்பார்கள் எனப் பதிலளிப்பார்கள்.

பிறகு அல்லாஹ், அவ்வடியார்கள் என்ன கேட்டார்கள்? என்று அவர்களிடம் கேட்பான். அதற்கவர்கள், அவர்கள் உன்னிடம் சுவர்க்கத்தை கேட்டார்கள் எனக் கூறுவார்கள். அதற்கு அல்லாஹ், அவர்கள் அதனைப் பார்த்துள்ளார்களா? என்று கேட்பான். அதற்கு மலக்குகள், இல்லை, அல்லாஹ்வின் மீது ஆணையாக! எங்கள் இரட்கனே! அவர்கள் அதனைப் பார்க்கவில்லை எனப் பதிலளிப்பார்கள்.



### 4. கழிப்பறையிலிருந்து வெளியேறுதல்

غُفْرَانَكَ

(குப்பரானக்)

பொருள்:

இறைவா! உனது மன்னிப்பை கேட்கிறேன்.
(நூல்: திர்மிதி 7)

### 5. ஒழுவுக்கு முன்

பிஸ்மில்லாஹ்

(அல்லாஹ்வின் திருப்பெயரால்... துவங்குகிறேன்)

### 6. ஒழுவுக்கு பின்

أَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ
لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

(அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக லஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரசூலுஹு )

## 2. விழித்தெழும் போது

اَلْحَمْدُ للهِ الَّذِيْ أَحْيَانَا بَعْدَ مَا أَمَاتَنَا وَإِلَيْهِ النُّشُوْر

(அல்ஹம்து லில்லாஹில்லதீ அஹ்யானா பஃத மா அமாத்தனா வஇலைஹிந் நுஷூ ர். )

பொருள்:

எங்களை தூங்கச் செய்த பிறகு மீண்டும் எழுப்பிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும், மேலும் அவனிடமே ஒன்று கூட வேண்டி இருக்கிறது.

## 3. கழிப்பறை போகும் போது

اَللَّهُمَّ إِنِيْ أَعُوْذُ بِكَ مِنَ الْخُبْثِ وَالْخَبَائِث

(அல்லாஹு ம்ம இன்னீ அஊது பிக்க மினல் குப்ஸி வல் கபாயிஸி)

பொருள்:

இறைவா! ஆண் பெண் ஷைத்தான்களின் தீங்கிலிருந்து உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன்.



எவ்வாறு இருக்கும்? என்று கேட்பான். அதற்கு மலக்குகள், அவர்கள் அதனைப் பார்த்திருந்தால் அதன் மீது மேலும் பேராசைக் கொள்வார்கள், அதிகமாகத் தேடுவார்கள், அதனை அடைய அளப்பெறும் ஆவல் கொள்வார்கள் எனக் கூறுவார்கள்.

பின்னர் அவர்கள் எதனை விட்டுப் பாதுகாவல் தேடுகிறார்கள் என மலக்குகளிடம் அல்லாஹ் கேட்பான். அதற்கவர்கள், அவர்கள் நரகை விட்டுப் பாதுகாவல் தேடுகின்றனர் என்பர். அவர்கள் அதனைப் பார்த்துள்ளார்களா? என்று அல்லாஹ் கேட்பான். அதற்கவர்கள், இல்லை. அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவர்கள் அதனைப் பார்க்கவில்லை என மறுமொழி கூறுவார்கள். அவர்கள் அதனைப் பார்த்திருந்தால் எவ்வாறு? என்று அல்லாஹ் கேட்பான். அதற்கவர்கள், அவர்கள் அதைப் பார்த்திருந்தால் இதைவிட மிக அதிகமாக அதனை விட்டு விரண்டோடுவார்கள். கடுமையாக அதனை அஞ்சுவார்கள் எனப் பதிலளிப்பார்கள். அப்போது அல்லாஹ் (மலக்குகளே) நான் அவர்களை மன்னித்து விட்டேன். அதற்கு உங்களைச் சாட்சிகளாக ஆக்குகிறேன் என்று கூறுவான். அப்போது ஒரு மலக்கு, ‘அவர்களில் ஒருவர் திக்ர் செய்தவர்களின் கூட்டத்தில் உள்ளவரல்ல, அவர் அவரது ஏதோ ஒரு தேவைக்காக அங்கு வந்தார்’ எனக் கூறுவார். அதற்கு அல்லாஹ், திக்ரு செய்தவர்களாக அமர்ந்திருந்தவர்களுடன் சேர்ந்து அமர்ந்து இருந்த எந்த மனிதரும் நற்பாக்கியத்தை இழக்க மாட்டார். (அவரும் நற்கூலி பெறுவார்) எனக் கூறுவான்.
(அறிவிப்பவர்: அபூஹு ரைரா (ரலி), நூல்கள்: புகாரி, முஸ்லிம்)

# திக்ரு பயிற்சிக்கான பாடங்கள்

திக்ரு பயிற்சிக்கான பாடங்கள் மூன்று அம்சங்களைக் கொண்டதாகும்.

1. சரியான உச்சரிப்புடன் மனனம் செய்தல்.
2. திக்ருகளின் அர்த்தத்தை கற்றுக் கொள்ளுதல்.
3. அதை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தும் பயிற்சியை மேற்கொள்ளுதல்.

பயிற்சிக்கான திக்ருகள் வருமாறு:

1. சையிதுல் இஸ்தி:ஃபார்

اَللّٰهُمَّ أَنْتَ رَبِّي ، لاَ إِلَهَ إِلاَّ أَنْتَ ،
خَلَقْتَنِي ، وَأَنَا عَبْدُكَ ، وَأَنَا عَلَى
عَهْدِكَ وَوَعْدِكَ مَا اسْتَطَعْتُ ، أَعُوْذُ
بِكَ مِنْ شَرِّ مَا صَنَعْتُ ، أَبُوْءُ لَكَ
بِنِعْمَتِكَ عَلَيَّ ، وَأَبُوْءُ بِذَنْبِي ،
فَاغْفِرْ لِيْ ، فَإِنَّهُ لاَ يَغْفِرُ الذُّنُوْبَ
إِلاَّ أَنْتَ .



(அல்லாஹு ம்ம அன்த ரப்பீ . லாஇலாஹ இல்லா அன்த . கலக்தனீ . வஅன அப்துக . வஅன அலா அஹ்திக வவஃதிக மஸ்த்ததஃது . அஊது பிக மின் ஷர்ரி மா ஸனஃது. அபூஉ லக பிநிஃமதிக அலய்ய . வஅபூஉ பிதன்பீ . ஃபக்ஃபிர்லீ . ஃபஇன்னஹு லா யக்பிருத் துனூப இல்லா அன்த .)

பொருள்:

அல்லாஹ்வே! நீயே என் இரட்சகன்! உன்னைத்தவிர வணக்கத்திற்குரிய இறைவன் வேறில்லை. நீயே என்னைப் படைத்தாய்! நான் உனது அடிமை. நான் என்னால் இயன்ற அளவுக்கு உனது உடன்படிக்கையிலும் உனது வாக்குறுதியிலும் நிலைத்திருக்கிறேன். நான் செய்தவற்றின் கெடுதிகளை விட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன். நீ எனக்களித்த அருட்கொடைகளை ஏற்றுக் கொள்கிறேன். எனது பாவத்தையும் ஏற்றுக் கொள்கிறேன். எனவே நீ என்னை மன்னித்தருள்வாயாக! ஏனெனில் உன்னைத் தவிர பாவங்களை மன்னிக்கக் கூடியவன் வேறு யாருமில்லை.

சிறப்பு:

இதனை யார் மாலையில் ஓதி காலையாவதற்குள் மரணிக்கிறாரோ அவர் சுவர்க்கம் நுழைவார். மேலும் யார் இதனை காலையில் ஓதி மாலையாவதற்குள் மரணிக்கிறாரோ அவரும் சுவர்க்கம் நுழைவார் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் (நூல்: புகாரி 6306)